Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 05, 2025

செவ்வாய்க்கிழமை மார்ச் 14, 2023 | ஒளி: 08 கதிர்: 228 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

# நள்ளிரவுக்கு பின்னர் தடை

இம்மாதம் 10ஆம் திகதி நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அனைத்து வகுப்புகளும் புதன்கிழமை (06) நள்ளிரவு 12.00 மணி முதல் தேர்வு முடியும் வரை தடைசெய்யப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# செம்மணியில் தரையை ஊடுருவி ஸ்கேன் செய்ய அனுமதி கிடைக்கவில்லை

நிதர்சன் வினோத்



செம்மணி பகுதியில் தற்போது அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டு மனித புதைகுழிகளுக்கு மேலதிகமாக அப்பகுதியில் வேறு மனித புதைகுழிகளும் காணப்படுகின்றனவா என்பதனை கண்டறியும் நோக்குடன் ஸ்கேன் நடவடிக்கைகள் திங்கட்கிழமை (04) அன்று முன்னெடுக்கப்பட்டன.

ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம், பரந்துபட்ட ஸ்கேன் நடவடிக்கைகளை முன்னெடுக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகள் கிடைக்கப்பெறவில்லை

அந்நிலையில், ஸ்ரீஜெயவர்தன புர பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்கேனர் கருவியை யாழ்ப்பாண பல்கலைகழகம் ஊடாக பெற்று அதனை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்த நடவடிக்கையை அடுத்து , திங்கட்கிழமை குறித்த ஸ்கேனரை பயன்படுத்தி ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



## ஐ.ஜி.பி தென்னக்கோனை நீக்கும் பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு

பொலிஸ்மா அதிபர் டீ.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனை 2002ஆம் ஆண்டின் 5ஆம்இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 17ஆம் வாசகத்தின் பிரகாரம் அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதத்தை ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி P2



# இலங்கை– இந்தியாவுக்கு இடையிலான 7 ஒப்பந்தங்களுக்கு எதிரான இரண்டு மனுக்கள் தள்ளுபடி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சமீபத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) செல்லாததாக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமைகள் மனுக்கள் உயர் நீதிமன்றத்தால் திங்கட்கிழமை (04) தள்ளுபடி செய்யப்பட்டன.

உயர்நீதிமன்ற நீதியரசர் அச்சலா வெங்கப்புலி மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற இரு நீதியரசர்கள் கொண்ட அமர்வு, விண்ணப்பங்களை தொடர எந்த முதன்மையான காரணங்களும் இல்லை என்று கூறி இரண்டு மனுக்களையும் தள்ளுபடி செய்ய முடிவு செய்தது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, வெற்றிகரமான டிஜிட்டல் தீர்வுகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் கிழக்கு மாகாணத்திற்கான பல்துறை மானிய உதவி குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்ட இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏப்ரல் 5 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் பரிமாறப்பட்டன. மனுதாரர்கள் சார்பாக ஜனாதிபதி வழக்கறிஞர் மனோகர டி சில்வா மற்றும் மூத்த வழக்கறிஞர் கனிஷ்கா விதாரண ஆகியோர் ஆஜரானார்கள். சட்டமா அதிபர் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஷ்வரன் ஆஜரானார்.



## கழிவுக்குழிக்குள் விழுந்து 8 வயது மாணவன் மரணம்

எஸ்.சதீஸ்

தனது தந்தையால் வெட்டப்பட்ட சுமார் 6 அடி ஆழமான மலசலக்கழிவு குழிக்குள் தவறுதலாக விழுந்த அவருடைய 8 வயது மகனான மாணவன், பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம், பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிவ் மேற்பிரிவில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## யோஷித, டெய்சியின் வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி ஃபாரஸ்ட் ஆகியோருக்கு எதிராக பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒக்டோபர் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

தொடர்ச்சி P2

## பாலியல் சேஷ்டைகள்: தனி நீதிபதி விசாரணை

பாராளுமன்ற தகவல் அமைப்புகள் மற்றும் மேலாண்மைத் துறையின் சில தலைமை அதிகாரிகள் கடந்த காலங்களில் செய்ததாகக் கூறப்படும் பல்வேறு துன்புறுத்தல் மற்றும் மிரட்டல் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சுஜாதா அழகப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## 214 நாட்களில் 76 துப்பாக்கிச்சூடு: 41 பேர் பலி

2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 03ஆம் திகதி வரை 76 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## அஸ்வெசுமவிலா அமைச்சர் வசிக்கிறார்?

அஸ்வெசும கொடுப்பனவிலா அமைச்சர் வசந்த சமரசிங்க வசிக்கிறார் என கேள்வியெழுப்பியுள்ள ஜே.வி.பியின் முன்னாள் உறுப்பினர் நந்தன குணதிலக, ஏனெனில், அவர்கள் தங்கள் சம்பளத்தை கட்சிக்கு வழங்குகிறார்கள் என்று கூறினார்.

“வசந்த, நீங்கள் அஸ்வெசும கொடுப்பனவில் வசிக்க வேண்டும், ஏனெனில் உங்கள் சம்பளத்தை நீங்கள், உங்கள் கட்சிக்கு வழங்க வேண்டும்,” என்றும் முன்னாள் நந்தன குணதிலக, தனது பேஸ்புக் பதிவில் கூறினார்.

தொடர்ச்சி P2



## ஒக்கம்பிட்டி ஓஐசிக்கு விளக்கமறியல் நீடிப்பு

இலஞ்சம் கேட்டு பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒக்கம்பிட்டி காவல் நிலைய பொறுப்பதிகாரி (OIC) ஐ, ஆகஸ்ட் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க, திங்கட்கிழமை (04) அன்று உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## போதை சாரதியின் இருக்கையில் கசிப்பு

### சாரதிக்கு விளக்கமறியல்

ரஞ்சித் ராஜபக்ஷ



இலங்கை போக்குவரத்து சபையின் (SLTB) ஓட்டுநர் ஒருவர் மதுபோதையில் பயணிகள் பேருந்தை ஓட்டியதற்காக நுவரெலியா பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை (03) கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## இ.ம. உ ஆணைக்குழுவினர் செம்மணியை பார்வையிட்டனர்



செம்மணி மனித புதைகுழி பிரதேசத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், திங்கட்கிழமை (04) அன்று பார்வையிட்டனர்.

தொடர்ச்சி P2

## 15 முறை பறக்கும் பலே கில்லாடி 35 கடவுச்சீட்டுகளுடன் சிக்கினார்

டி.கே.பி.கபில



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு மதுபான போத்தல்களைக் கொண்டு சென்ற இரண்டு கடத்தல்காரர்களை, திங்கட்கிழமை (04) அதிகாலை கைது செய்த கட்டுநாயக்க பொலிஸ் அதிகாரிகள் குழு, வானில் இருந்து 35 வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளையும் மீட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# செம்மணியில் தரையை ஊடுருவி ஸ்கேன் செய்ய அனுமதி கிடைக்கவில்லை

அதேவேளை செம்மணி மனித புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்று பொருட்களான ஆடைகள் மற்றும் பிற பொருட்களை பொதுமக்கள் அடையாளம் காட்டும் வகையில் செவ்வாய்க்கிழமை (05) அன்று செம்மணி சிந்துபாத்தி இந்து மயானத்தில் மதியம் 1.30 மணி முதல் , மாலை 5 மணி வரையில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சான்று பொருட்களை பார்வையிட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நள்ளிரவுக்கு பின்னர் தடை

மேலும், இம்மாதம் 10ஆம் திகதி நாடு முழுவதும் 2,787 பரீட்சை மையங்களில் புலமைப்பரிசில் பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, புதன்கிழமை (06) நள்ளிரவு 12.00 மணி முதல் பரீட்சார்த்திகளுக்கான கல்வி வகுப்புகளை ஏற்பாடு செய்து நடத்துதல், பாடம் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள், பட்டறைகளை நடத்துதல், மேற்படி பரீட்சைக்கான மாதிரி வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிட்டு விநியோகித்தல், சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்களை வெளியிடுதல் அல்லது மின்னணு அல்லது அச்சு ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் பரீட்சார்த்திகளின் வசம் வைத்திருத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளை மீறி எந்தவொரு நபரோ, நிறுவனமோ அல்லது பிற தரப்பினரோ செயல்பட்டால், அந்த நபர், நிறுவனம் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்கு குற்றவாளியாக இருப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரோ, நிறுவனமோ இந்த விதிமுறைகளை மீறினால் அருகிலுள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்குப் பின்வரும் தொலைபேசி எண்களில் புகார் அளிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பொலிஸ் தலைமையகம், பொலிஸ் அவசர தொலைபேசி எண் 119 அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் தொலைபேசி எண் 1911 அல்லது

பாடசாலை பரீட்சைகள் அமைப்பு மற்றும் பெறுபேறுகள் கிளைக்கு 0112 421 111/ 0112 784 208/ 0112 784 537 ஆகிய தொலைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கலாம் என்றும் அறிவித்துள்ளது.





# கழிவு குழிக்குள் விழுந்து 8 வயது மாணவன் மரணம்

தரம்-3 இல் கல்விப்பயிலும் ஹேலோன் சசான் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம், ஞாயிற்றுக்கிழமை (04) மாலை இடம்பெற்றுள்ளது.

கிவ் மேற்பிரிவில் தோட்டத் தொழிலாளரால் நிர்மாணிக்கப்படும் மலசலக்கூடத்துக்கான கழிவுக்குழி சுமார் 6 அடி ஆழத்துக்கு வெட்டப்பட்டுள்ளது. மழைக்காலம் என்பதால் அந்த குழி, மழைநீரினால் நிரம்பிள்ளது. எனினும், அந்த பக்கமாக சென்றிருந்த சிறுவன் வழுக்கி அந்த குழிக்குள் விழுந்து இறந்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய மகனை வீட்டில் காணக்கிடைக்காமையால் தேடி பார்த்ததாகவும். அவன் அணிந்திருந்த இரண்டு செருப்புகளும் மலசலக்கூட குழியின் அருகில் அநாதரவாக கிடைந்ததாகவும் தெரிவுள்ள தந்தை, அந்த குழிக்குள் இறங்கி தேடிய போதே, மகனை மீட்டதாகவும் தந்தை தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் அக்கம்பக்கத்தினரின் உதவியுடன், மகனை டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம். எனினும், சிறுவன் ஏற்கெனவே இறந்துவிட்டார் என வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். சிறுவனின் உடல், டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொகவந்தலாவை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யோஷித, டெய்சியின் வழக்கு ஒத்திவைப்பு

கடந்த 2009ஆம் மார்ச் 31 முதல் 2013 டிசெம்பர் 12 வரையான காலப்பகுதியில், சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட ரூ.59 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை மூன்று தனியார் வங்கிக் கணக்குகளில் நிலையான வைப்புகளாக வைத்ததன் மூலம், பணம் சுத்திகரிப்பு தடுப்பு சட்டத்திற்கு உட்பட்ட குற்றங்களைச் செய்துள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# பாலியல் சேஷ்டைகள்: தனி நீதிபதி விசாரணை

அவர் ஒரு மூத்த மற்றும் அனுபவம் வாய்ந்த நீதிபதி, அவர் நாட்டில் பல சர்ச்சைக்குரிய வழக்குகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

இந்த நியமனம் பாராளுமன்ற பணியாளர் ஆலோசனைக் குழுவின் முடிவின்படி, பாராளுமன்ற துணைச் செயலாளர் நாயகமும், தலைமைப் பணியாளர் சட்டத்தரணியுமான சமிந்த குலரத்னவால் செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி 11ஆம் திகதி விசாரணைகளைத் ஆரம்பிக்கவுள்ளார் என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

# நீக்கும் பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய ஒகஸ்ட் மாதம் 5, 6 மற்றும் 7ஆம் திகதிகளில் பாராளுமன்றம் கூடவுள்ளது. ஒகஸ்ட் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை போயாதினம் என்பதால் அன்று பாராளுமன்றம் கூடாது.

அதற்கமைய, ஒகஸ்ட் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணி முதல் 10 மணிவரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து 10 மணி முதல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 11 மணி முதல் 11.30 மணிவரையான நேரம் நிலையியற் கட்டளை 27(2)ன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் 11.30 மணி முதல் மாலை 4 மணிவரை பொலிஸ்மா அதிபர் டீ.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனை 2002ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கை முறை) சட்டத்தின் 17ஆம் வாசகத்தின் பிரகாரம் அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 4 மணிக்கு இதற்கான வாக்கெடுப்பை நடத்தவும் இங்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஐஜிபி தேசபந்து தென்னகோனை பதவியில் இருந்து நீக்கும் பிரேரணை பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த பிரேரணை தற்போது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்ளது. ஐந்து முழு நாட்கள் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்ட பின்னர் இந்த பிரேரணை பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படும் என்று பாராளுமன்ற செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், விவாதம் நடைபெறும் நாளில் ஆளும் கட்சி எம்.பிக்கள் கொழும்பில் இருக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த பிரேரணை நிறைவேற்றப்பட, சமூகமளிக்காதவர்கள் உட்பட அனைத்து எம்.பிக்களில் 113 பேர் போதுமானதாக இருக்கும். பாராளுமன்றத்தின் அமைப்பைக் கருத்தில் கொண்டு, இந்த பிரேரணை நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்த பிறகு, அரசியலமைப்பு சபைக்கு ஐஜிபி பதவிக்கான பெயரை ஜனாதிபதி பரிந்துரைப்பார்.

# செம்மணியை பார்வையிட்டனர்

மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்களான கலாநிதி ஜகன் குணத்திலக்க, பேராசிரியர் தை.தனராஜ் மற்றும் பேராசியர் பாத்திமா பர்ஷான ஹனீபா ஆகியோருடன் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் உள்ளிட்ட குழுவினரே நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது, புதைகுழி அகழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அங்கிருந்த துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.



# 15 முறை பறக்கும் பலே கிள்ளாடி

## 35 கடவுச்சீட்டுகளுடன் சிக்கினார்

இந்தக் கடத்தல் நடவடிக்கையின் முக்கிய சந்தேக நபர் தியாத்தலாவைச் சேர்ந்த 22 வயதுடையவர். மாதத்திற்கு 15 முறை பறந்து வருகிறார் வத்தளையைச் சேர்ந்த 40 வயதானவர் கடந்த இருபது ஆண்டுகளாக இந்த வர்த்தகத்தில் ஈடுபடுபவர் என்பது தெரியவந்துள்ளது.

இறந்த பெண்கள், துறவிகள், மாணவர்கள் ஆகியோரின் கடவுச்சீட்டுகள் மற்றும் காலாவதியான மற்றும் செல்லாத கடவுச்சீட்டுகள் அவரிடம் இருந்தன. அவற்றில், இந்த பிரதான கடத்தல்காரருக்குச் சொந்தமான 06 கடவுச்சீட்டுகள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்க விமான நிலைய வரி இல்லாத ஷொப்பிங் வளாகத்தில் இருந்து இந்த வெளிநாட்டு மதுபான இருப்பைப் பெற அவர் இந்த கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி, அதன் ஒரு பகுதியை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மற்றொரு வாகனத்தில் எடுத்துச் சென்றுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 30 வெளிநாட்டு மதுபான போத்தல்களின் உள்ளூர் மதிப்பு 147,000 ரூபாயாகும் மற்றும் 1,376 அமெரிக்க டொலர்களுக்கு கூடுதலான மதிப்புள்ள வோட்கா, டெக்கீலா மற்றும் விஸ்கி போத்தல்களும் அடங்கும். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மற்றொரு கடத்தல்காரர் வத்தளைப் பகுதியில் வசிக்கும் 40 வயதுடைய வேன் ஓட்டுநர் ஆவார்.

இந்த சம்பவம் குறித்து கட்டுநாயக்க பொலிஸாரின் அதிகாரிகள் தற்போது விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

கடத்தல்காரர்கள் இருவரும் மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்ட கடவுச்சீட்டுகளுடன் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



# போதை சாரதியின் இருக்கையில் கசிப்பு

வெலிமடை-நுவரெலியா வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்து, திவுலபிட்டிய டிப்போவைச் சேர்ந்தது என்றும், சீதா எலியாவில் உள்ள ஒரு பொலிஸ் சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தை இயக்கும்போது ஓட்டுநர் குடிபோதையில் இருந்ததை பணியில் இருந்த அதிகாரிகள், கண்டறிந்தனர், அந்த நேரத்தில் அந்தப் பேருந்து நிறைய பயணிகளை ஏற்றிச் சென்றது.

மேலும் சோதனை செய்ததில், ஓட்டுநர் இருக்கைக்குப் பின்னால் பல கசிப்பு கேன்கள் இருப்பது தெரியவந்தது. மேலும் விசாரணைக்காகப் பேருந்து உடனடியாக பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

பின்னர் அதிகாரிகள் நுவரெலியா டிப்போவைச் சேர்ந்த மற்றொரு ஓட்டுநரும் நடத்துநரும் பேருந்தை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு பயணத்தைத் தொடர ஏற்பாடு செய்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதி, நுவரெலியா நீதவான் திருமதி லங்காகனி பிரபுத்திகா முன்னிலையில், திங்கட்கிழமை (04) ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# ஒக்கம்பிட்டி ஓஐசிக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஒக்கம்பிட்டி காமினியபுர பகுதியில் மணல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர் ஒருவர் அளித்த புகாரின் அடிப்படையில் இந்த கைது நடந்ததாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மணல் வியாபாரத்தை எந்தவித இடையூறும் இல்லாமல் மேற்கொள்ள மாதத்திற்கு 50,000 ரூபாவை சந்தேக நபர் தன்னிடம் கேட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளரிடம் இருந்து ரூ 47,000 ரூபாயை சந்தேக நபர் பல சந்தர்ப்பங்களில் லஞ்சமாக பெற்றதாக விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது.

விசாரணைகள் இன்னும் தொடர்வதால், சந்தேக நபரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தில் அதிகாரிகள் கோரி நின்றனர்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் ஜூலை 28ஆம் திகதி கைது செய்யப்பட்டு பின்னர் வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து அவர், ஒகஸ்ட் 4 வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

# அஸ்வெசுமவிலா அமைச்சர் வசிக்கிறார்?

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் ஒழிக்கப்பட்டால், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அஸ்வெசும சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்று அமைச்சர் சமரசிங்க கூறியதற்கு பதிலளிக்கும் வகையில் இட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 76 துப்பாக்கிச் சூடு: 41 பேர் பலி

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 41 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 43 பேர் காயமடைந்துள்ளதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

மாத்தறை கபுகொட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (03) அன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்திலும், அம்பலாந்தோட்டை ஹங்காம, பிங்கம பகுதியில் சனிக்கிழமை (02) அன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்திலும் ஒருவர் காயமடைந்தார்.

# சாமிமலை சம்பவம்; பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

காமினி பண்டார

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை நகரில் கடந்த 30ஆம் திகதி மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரை கொடூரமாக தாக்கிய, சாமிமலை நகர வர்த்தகர்கள் மீது சட்டத்தை அமல்படுத்தக் கோரி திங்கட்கிழமை(04) பிற்பகல் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட பொதுமக்கள் சாமிமலை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காயமடைந்த மனநலம் பாதிக்கப்பட்ட 30 வயதான பரமேஸ்வரன் என்பவர் சாமிமலையில் உள்ள கவரவில தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் தற்போது அவர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட நபர்களை உடனடியாக கைது செய்து சட்டத்தை நியாயமாக அமுல்படுத்துமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியுள்ளனர்.











# “காற்றாலைக்கு அனுமதியோம்”

விஜயரத்தினம் சரவணன்

மன்னார் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் காற்றாலை திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதியோம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மக்களின் அனுமதியின்றி, மக்களின் விருப்பிற்கு எதிராக மன்னாரில் அமுல்படுத்தப்படுவதற்கு முயற்சிக்கப்படுகின்ற காற்றாலைத் திட்டத்திற்கு எதிராக மக்களோடு இணைந்து செயற்பட உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரில் திங்கட்கிழமை (04) அன்று இடம்பெற்ற காற்றாலை திட்டத்திற்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்றுக் கருத்து தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்தக் காற்றாலை திட்டம், கனிய மணல் திட்டமென எமது மக்களுக்கு மிக மோசமான செயற்பாடுகளை முந்தைய அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்தன.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கமானது மக்களின் நன்மை கருதி இத்தகைய காற்றாலை மற்றும் கனிய மணல் திட்டங்களுக்கு எதிராக செயற்படுவார்கள் என்று மக்கள் எதிர்பாத்திருக்கையில், இந்த அரசாங்கமும் இத்தகைய மக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய திட்டங்களுக்கு ஆதரவாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக மக்களின் அனுமதியின்றி, விருப்பமின்றி இத்தகைய காற்றாலை திட்டங்கள் அமல்படுத்தப்படாது என மாவட்ட மற்றும் பிரதேச




அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் உட்பட பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், தற்போது மக்கள் அனுமதிக்காத, மக்கள் விரும்பாத இந்தக் காற்றாலை திட்டத்தை இங்கு மன்னாரில் அமுல்படுத்துவதற்கு முனைகின்றனர்.

இத்தகைய அத்துமீறிய செயற்பாடுகளுக்கு எதிராக மிகக் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு மக்களின் அனுமதியின்றி அத்துமீறி மன்னாரில் காற்றாலை திட்டத்தை அமல்படுத்த முயற்சிப்பதற்கு எதிராக பாராளுமன்றில் எனது கருத்துக்களைப் பதிவு செய்வேன்.

குறிப்பாக இத்தகைய திட்டங்களின் மூலம் எமது வளங்களை சூறையாடப்படுவதுடன், எமது இடங்களை அழிக்கின்ற செயற்பாடாகவும் இது அமைகின்றது.

இதேபோல்தான் மக்களின் எதிர்ப்பையும் மீறி முல்லைத்தீவு - கொக்கிளாய் பகுதியில் கனிய மணல் அகழ்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறு கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக கடலரிப்பு ஏற்பட்டு கடல் நீர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வந்த அவலநிலை ஏற்பட்டிருந்தது.

அத்தோடு, கூட்டங்களிலே மக்கள் அனுமதிக்காத திட்டங்களை அமல்படுத்த மாட்டோம் எனக் கூறிவிட்டு எந்த அடிப்படையில் இவ்வாறான திட்டங்களை இங்கு அமல்படுத்த முனைகின்றனர்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் மக்கள் அனுமதிக்காத, விரும்பாத திட்டங்கள் எவையும் அனுமதிக்கப்படுவதில்லை. மக்களின் அனுமதி மற்றும் விருப்பத்திற்கு மாறான திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனைவரும் பயப்படுவார்கள். விடுதலைப் புலிகளின் மேல் அனைவரும் மிகுந்த பயம் இருந்தது.

ஆனால், தற்போது மக்கள் அனுமதிக்காத திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு எமது இடங்களிலுள்ள வளங்களைச் சூறையாடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய காற்றாலை திட்டங்களை எமது பகுதிகளில் ஏற்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எனவே, இத்தகைய திட்டங்களுக்கு எதிராக நாம் மக்களோடு இணைந்து செயற்படுவோம். இவ்வாறான அத்துமீறிய அராஜக வேலைகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோமென மிகத் தெளிவாகச் சொல்லி வைக்க விரும்புகின்றோம்” என்றார்.

# மனநலம் பாதிக்கப்பட்ட நபரை தாக்கிய வர்த்தகர்கள்

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா, சாமிமலை கவரவலை பகுதியைச் சேர்ந்த துரைராஜ் சண்முகநாதன் என்ற மனநலம் பாதிக்கப்பட்ட நபர், மூன்று வர்த்தகர்களின் தாக்குதலுக்குள்ளாகி மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் மூவரையும் கைது செய்து ஹட்டன் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, பதில் நீதிவான், தலா ஒருவருக்கு 500,000/= ரூபாய் சரீர பிணையில் விடுவிக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், “இன்று வரை பாதிக்கப்பட்ட நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். வீடு திரும்பவில்லை, ஆனால், தாக்கிய சந்தேக நபர்கள் வெளியே வந்து தங்களுடைய வாழ்வாதாரத்தைத் தொடங்கி விட்டார்கள்.

இந்நிலையில், தோட்ட தொழிலாளர்கள் என்றுமே பயந்து வாழ வேண்டுமா தோட்ட தொழிலாளர்களுக்கு என்றுமே நியாயம் இல்லையா தோட்டத் தொழிலாளர்கள் இல்லையென்றால் முதலாளிமார்களுக்கு வாழ்வாதாரமே இல்லை.

தோட்ட தொழிலாளர்களை நம்பி வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்லும் முதலாளிமார்கள் எங்களையே தாக்குகிறார்கள் இதற்கொரு நியாயம் இல்லையா ஏன் பணம் வைத்திருப்பவர்களுக்கு ஒரு சட்டம் ஏழைகளுக்கு மாத்திரம் ஒரு சட்டமா” என சாமிமலை கவரவலை பகுதியில் உள்ள அனைத்து தொழிலாளர்களும் கேள்வி எழுப்புகின்றனர்.

# திருட்டு மாம்பழத்துடன் ஒருவர் கைது

சுமனசிறி குணதிலக

மொனராகலை, தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடவலவ வீதியில் பதினைந்தரை சந்திக்கு அருகில் உள்ள ஒரு மாம்பழத் தோட்டத்திலிருந்து 147 கிலோ கிராம் ‘அல்போன்சு’ வகை மாம்பழங்களை ஏற்றிச் சென்ற கார் ஞாயிற்றுக்கிழமை (03) அன்று செவனகல பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

திருடப்பட்ட மாம்பழத் தொகையின் பெறுமதி 47,000 ரூபாய் என தெரியவந்துள்ளது.

தோட்டத்தின் பராமரிப்பாளர் தனமல்வில பொலிஸாருக்கு இது தொடர்பாக உடனடியாக அறிவித்து குறித்த காரின் பதிவு எண் தனமல்வில பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

அதற்கமைய, தனமல்வில பொலிஸார் சுற்றியுள்ள பொலிஸ் நிலையங்களுக்குத் தகவல் வழங்கி செவனகல, கிரி இப்பன் வெவ பகுதியில் வைத்து கார் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாம்பழத் தொகைக்குள் இருந்து உலர்ந்த கஞ்சா இரண்டு துண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட 24 வயதுடைய இளைஞன் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு சந்தேக நபர் தனமல்வில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# முழு நிர்வாணமாக நடுவீதியில் சைக்கிள் ஓட்டிய நபர்


பிரதான வீதியின் நடுவில் முற்றிலும் நிர்வாணமாக சைக்கிளில் செல்லும் ஒரு நபர் தொடர்பிலான காட்சிகள் கந்தானை நகரில் பதிலாகியுள்ளது.

சமூக ஊடகங்களில் பரவலாகப் பரவி வரும் இந்த காட்சியில், அந்த நபர் தனது மிதிவண்டியின் கைப்பிடியின் இருபுறமும் தனது ஆடைகளைப் பிடித்துக்கொண்டு அமைதியாக தனது மிதிவண்டியை மிதிப்பது காட்டப்பட்டுள்ளது.



பட்டப்பகலில் நடந்த இந்த சம்பவம், குடியிருப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. அந்த நபரை அடையாளம் காணவும், ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கவும் பொலிஸார் தற்போது காட்சிகளை மதிப்பாய்வு செய்து வருகின்றனர்.

# எரிபொருள் கசிவு காரணமாக பல வாகனங்கள் விபத்து



ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் பல இடங்களில் எரிபொருள் கொட்டிக்கிடப்பதன் காரணமாக இவ் வீதியூடாக பயணித்த பல மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன.

ஹட்டன்-நுவரெலியா பிரதான வீதியில் பயணித்த வாகனமொன்றில் இருந்து எரிபொருள் கசிந்த நிலையில், பெய்த கடும் மழை காரணமாக வீதி முழுவதும் எரிபொருள் கொட்டிக்கிடந்தது. இதனால் இவ் வீதியூடாக பயணித்த பல மோட்டார் சைக்கிள்கள் சறுக்கி விபத்துக்குள்ளானதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியாவில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் குறித்த இடத்தில் வைத்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து பெய்து வரும் மழையுடன் குறித்த வீதியில் எரிபொருள் கொட்டிக்கிடப்பதனால் இவ் வழியாக பயணிக்கும் வாகனங்களை எச்சரிக்கையுடன் செலுத்துமாறு ஹட்டன் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.



# யானைகள் அட்டகாசம்

எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயத்தில் காட்டு யானைகள் உட்புகுந்து பாடசாலை நுழைவாயில் மற்றும் சுற்றுமதில் ஆகியவற்றை சேதப்படுத்தியுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.பி.ஜெமீல் தெரிவித்தார்.

ரிதிதென்ன குடியிருப்பு பகுதிக்குள் திங்கட்கிழமை(4) அன்று அதிகாலை1 மணியளவில் உட்புகுந்த யானைகள் பாடசாலை நுழைவாயில் மற்றும் சுற்றுமதிலை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாக அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

# அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் சாரதி பலி: சாரதி கைது

கொழும்பு வெளிவட்ட, அதிவேகப் பாதையில் ஏற்பட்ட விபத்தில், கொள்கலன் லொறி ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்ததாக அத்துருகிரிய அதிவேகப் பாதை கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் அலவதுகொட, சிஸ்டன் பிளேஸைச் சேர்ந்த டபிள்யூ. கே.ஏ.பி.வர்ணசிறி (வயது 49) என அடையாளம் காணப்பட்டுள்ளார். கடவத்தை நுழைவாயிலிலிருந்து மாத்தறை நோக்கி ஓடுகளுடன் பயணித்த கொள்கலன் லொறி, ஓடுகளை மூடியிருந்த கூடாரத் துணியில் கட்டப்பட்டிருந்த கயிறுகள் அறுந்து போயின. கொழும்பு வெளிவட்டச் சாலையிலிருந்து 5.8 கிலோ மீட்டர் தொலைவில், கொள்கலன் லொறி நின்று, கயிறுகளை மீண்டும் கட்ட அதன் பின்னால் சாரதி வந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்த நேரத்தில், கம்பங்களை ஏற்றிக்கொண்டு கடுவெலவிலிருந்து ஹொரணைக்குச் சென்ற லொறி கொள்கலனின் ஓட்டுநர் மீது மோதியதில் அவர் படுகாயமடைந்து, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய பஹல கிரிபாவைச் சேர்ந்த 49 வயது லொறி ஓட்டுநர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஹெரோயினுடன் கணவன் - மனைவி கைது

எஸ்.தில்லைநாதன், நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கணவன் மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 90 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதியான குரு நகரைச் சேர்ந்த தம்பதியரே இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை (03) அன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ட்ரம்பின் வரிபோரில் தப்பி பிழைத்த இலங்கை

இலங்கை மீது விதிக்கப்பட்ட வரியை 20 சதவீதமாகக் குறைத்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஓரளவு நிவாரணம் அளித்துள்ளார். ஆனால், நம்மை விட வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட சில நாடுகள் மீது குறைந்த வரிகளை விதிப்பதில் அவர் தாராள மனப்பான்மையுடன் செயல்பட்டு வருகிறார்.

இலங்கையின் ஆடைகளை வாங்குவதில் அமெரிக்கா முன்னணியில் உள்ளது. அந்த ஒப்பந்தத்திலிருந்து எங்களுக்கு அதிக அளவு டொலர்கள் கிடைத்தன. ட்ரம்பின் வரி உயர்வுடன், எங்கள் ஆடைகளை வாங்கும் அமெரிக்க வணிகர்கள் அதிகரித்த வரியுடன் அந்த பொருட்களை அதிக விலைக்கு விற்கிறார்கள். பின்னர், எங்கள் ஆடைகளுக்கான தேவை குறையும் போது, அமெரிக்காவில் எங்கள் ஆடைகளை வாங்குபவர்கள் எங்களிடமிருந்து வாங்குவதை நிறுத்துகிறார்கள்.

இந்த டொலர்கள் அனைத்தும் நாட்டை நடத்த போதுமானதாக இல்லாததால், அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து டொலர்களை கடன் வாங்குவதன் மூலம் அந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்கிறது. கடந்த பிரச்சனையான காலகட்டத்தில், வங்கதேசமும் எங்களுக்கு 500 மில்லியன் டொலர்களைக் கடன் கொடுத்தது. அந்த நேரத்தில், பிரதமர் ஷேக் ஹசீனா வங்கதேசத்தில் ஆட்சியில் இருந்தார். நாங்கள் 500 மில்லியன் டொலர்களைக் கடன் கொடுத்தோம், அவரது அரசாங்கம் ஒரே நாளில் வீழ்ந்தது.

இலங்கையில், கடன் கொடுப்பவர் இறந்தால், கடன் திருப்பிச் செலுத்தும் தொகையை செலுத்த முடியாமல் போகலாம். கடன் கொடுப்பவர்களின் மகன்கள் திருடர்களாக மாறினால், அவர்கள் கடன் கொடுக்காமல் தப்பிக்க முடியாது. அதேபோல், வங்கதேச பிரதமர் மாறி விட்டார் என்பதற்காக கடன்களை செலுத்துவதை நிறுத்த முடியாது.

இலங்கை என்பது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் நாடு. உங்கள் உள்ளாடையின் துணி வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகிறது. அந்த ஆடையின் றப்பர் பேண்டும் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகிறது. அந்த ஆடையைத் தைக்கும் தையல் இயந்திரம் ஒரு வெளிநாட்டுத் தயாரிப்பு. அந்த இயந்திரத்தின் ஊசிகள் வெளிநாட்டுப் பொருட்கள்.

இலங்கை அரிசியில் தன்னிறைவு பெற்ற நாடு என்ற தவறான கதை உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், லட்சக்கணக்கான தொன் அரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. கடந்த பருவ நெல் அறுவடையிலிருந்து பெறப்பட்ட நெல் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபையின் கிடங்குகளில் உள்ளது. அவை இரண்டு வேளை உணவுக்கு மட்டுமே போதுமானவை. அதாவது, மூன்றாவது வேளை உணவுக்குப் பிறகு உணவுக்காக அரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும்.

நெல் உற்பத்திக்குத் தேவையான உரம் வெளிநாட்டிலிருந்து வருகிறது. நெல் உற்பத்திக்கான டிராக்டர் வெளிநாட்டிலிருந்து வருகிறது. அரிசியை வெட்டப் பயன்படுத்தப்படும் அரிவாளுக்கான இரும்பு வெளிநாட்டிலிருந்து வருகிறது. பெரிய நெல் வயல்களில் அரிசியை வெட்டிப் பிரிக்கும் 'சுனாமி' என்ற பெரிய இயந்திரமும் வெளிநாட்டிலிருந்து வருகிறது.

இலங்கைக்கு ஒரு தன்னிறைவு பெற்ற நாடாக மாற விருப்பம் இல்லை. நமது மக்கள் அந்த நேரத்திற்கு மட்டும் போதுமான அளவு வெட்டி, அதன் மூலம் தங்கள் அன்றாட செலவுகளை ஈடுகட்டப் பழகிவிட்டனர். எனவே, இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு நீண்டகால அல்லது பரந்த பொருளாதார எதிர்பார்ப்புகள் இல்லை. இப்படி ஏமாற்றம் ஏற்படும்போது, ஒரு நாடு ஒருபோதும் வளர்ச்சியடையாது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

நினைவு அடுக்குகளில் பதிவுகள் பெருகிய வண்ணம் இருக்கின்றனவே தவிர, அவை நிகழ்ந்த பதிவுகளை அழிக்க முடியாமல் திணறுகின்றன. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிசிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிசிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிசிக்கும்.

இளமைக்கால சேட்டைகள், குறும்புகள், பாசக்கார நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, அந்தக் காலத்தலீ பாடசாலைக்கு வராமல் ஒளிந்து கொண்டிருக்கும் மாணவர்களை, எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்குக் கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

இப்போது நினைத்தாலும் அந்ப் பசுமை மிகு எண்ணங்களிலிருந்து மீளமுடியாதுள்ளது. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிசிக்கும்.

கோவில் திருவிழாக்கள், நாடகங்கள், கூத்துகள். கோவில் திருவிழாக்கள், எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்குக் கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்து கொண்டு செல்வார்

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

மொஹமட் பாதுஷா

புலிகள் நிகழ்த்திய

# காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலை

குருக்கள்மடம் பிரதேசத்தில் வைத்து முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில். காத்தான்குடிப் பள்ளிவாசல்களில் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை மிலேச்சத்தனமாகப் புலிகள் கொன்று குவித்த சம்பவத்தின் 35ஆவது நினைவு தினமும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஆபத்து வருகின்றபோது மக்கள் ஒன்றுகூடுகின்ற, அடைக்கலம் தேடுகின்ற இடமாக எப்போதும் வணக்கஸ்தலங்கள் இருக்கின்றன. இறை நம்பிக்கையுள்ள மக்களின் கடைசிப் புகலிடமாகவும் இவை உள்ளன. இதில் எந்த மதக் குழுமத்தைச் சேர்ந்தவர்களும் விதிவிலக்கல்லர்.

கொழும்பிலும் வேறுபல இடங்களிலும் கத்தோலிக்க தேவாலயங்களில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மிக மிலேச்சத்தனமானது. இதனை யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனோடு சம்பந்தப்பட்டவர்களின் ஜனாஸாக்களை முஸ்லிம்கள் பொறுப்பேற்காமைக்கும், இதுவரை அந்தக் கும்பலுக்காக வக்காலத்து வாங்காததற்கும் காரணம் இது இஸ்லாத்திற்கு விரோதமான, மனித குலத்திற்கு எதிரான செயல் என்பதனாலாகும்.

அதுமட்டுமன்றி, ஒரு புனித நாளில் வழிபாட்டுத் தலங்களுக்குள் தாக்குதல் நடத்துவதற்கு முஸ்லிம் அடிப்படைவாத, பயங்கரவாத குழுவொன்று துணைபோனதை முஸ்லிம் சமூகத்தால் ஒருபோதும் ஜீரணிக்கவே முடியாது. இறைவனின் சந்நிதியிலேயே பலியெடுக்கப்பட்ட மக்களின் வலி கொடியது. அது பெரும் பாவமாகும்.

ஆனால், இந்த அனுபவத்தை முஸ்லிம்கள் 35 வருடங்களுக்கு முன்னரேயே பெற்று விட்டனர். காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் அக்கரைப்பற்றிலும் பள்ளிவாசல்களில் தொழுகைக்காக ஒன்று கூடியவர்களைத் துளியளவு கூட ஈவிரக்கமின்றி கொலை செய்ததை, எந்தப் போராட்ட கோட்பாட்டினாலும் நியாயப்படுத்தி விட முடியாது.

இதுபோல, தலதா மாளிகை போன்ற வழிபாட்டு இடங்களிலும் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றதை நாமறிவோம். அப்படியென்றால், 90களில் இந்த மோசமான கலாசாரத்தை ஆரம்பித்து வைத்தது விடுதலைப் புலிகளும் அவர்களுடன் சில திட்டங்களில் சேர்ந்தியங்கிய ஆயுதக் குழுக்களும் என்றுகூடச் சொல்லலாம்.

தமிழர்களும் முஸ்லிம்களும் மொழியால் நிலத்தால் மட்டுமன்றி அரசியல், சமூக ரீதியாகவும் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல, இருந்த காலமொன்று உள்ளது, அப்போதிருந்த மூத்த தமிழ் அரசியல்வாதிகள் முஸ்லிம்கள் தனியான ஒரு இனக் குழுமம் என்ற அடையாளத்தையும் அந்தஸ்தையும் கொடுத்தனர் எனலாம்.

இருப்பினும், 80களின் நடுப்பகுதியில் பல தமிழ் ஆயுதக் குழுக்கள் அரசியல் கட்சிகளை மேவத் தொடங்கின. ஆயுதங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. கணிசமான தமிழ் அரசியல்வாதிகளும் கட்சிகளும் குறிப்பாக விடுதலைப் புலிகளுடன் ஒத்திசைவாகச் செயற்படத் தொடங்கினர்.

அப்போது முஸ்லிம்கள் தனிவழியில் பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ் உருவானது இந்த தருணத்தில்தான். நிலைமை இப்படியிருக்கும் போது புலிகளும் இன்னும் ஒருசில தமிழ் ஆயுதக் குழுக்களும் முஸ்லிம்களை நசுக்கத் தொடங்கின. 90களில் இந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தமிழ-முஸ்லிம் உறவில் முதல் கீறல் என்பது கிழக்கு மாகாணத்தில் புலிகள் நடத்திய பள்ளிவாசல் படுகொலைகளில் ஆரம்பித்தது. இரண்டாவது பெரிய உறவு முறிவு வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதில் நடந்தேறியது. வரலாற்றை அறிந்த யாரும் இதனை மறுக்க முடியாது.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3ஆம் திகதி முஸ்லிம்கள் வழக்கமாக இரவுத் தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளை அயற் கிராமங்களின் ஊடாக காத்தான்குடிக்குள் நுழைந்த விடுதலைப் புலிகள் பள்ளிவாசல்களுக்குள் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்த பெரியவர்களும் சிறுவர்களுமாக சுமார் 103 பேரை கொன்று குவித்து விட்டுப் போனார்கள்.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல், அதே பகுதியிலுள்ள மஸ்ஜிதுல் {ஹுஸைனிய்யா பள்ளிவாசல் ஆகிய இரண்டிலும் தொழுகையி ல் ஈடுபட்டுக் கொண்டிருந்த 103 முஸ்லிம்கள் புலிகளால் அன்றைய தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர். 140 பேர் காயமடைந்தனர். அன்று வெள்ளிக்கிழமை இரவு இஷாத் தொழுகைக்கான அதான் சொல்லப்பட்டதும் சிறி யவர், பெரியவர் என அனைவரும் பள்ளியினுள் சென்று வுழூ செய்து கொண்டு தொழுகைக்காக இமாமின் பின்னால் வரிசையாக நின்று கொண்டிருந்த போது புலிகள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து குண்டுத் தாக்குதலையும் நடத்தினர். இதன்போது, பலரின் உயிர் அவ்விடத்திலேயே பிரிந்தது. புலிகள் பள்ளிவாசலினுள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றார்கள் என்பதை அங்கு தொழுது கொண்டிருந்த பலரும் பின்னர்தான் புரிந்து கொண்டார்கள். பலர் படுகாயங்களுடன் குற்றுயிராய்க் காணப்பட்டு பின்னர் மரணித்தனர்.

தொழுகைக்காக வந்த சிலரை உள்ளே அவசரமாகச் செல்லுங்கள் என பள்ளிக்குள் அனுப்பி விட்டு அவர்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அப்போது பலர் கூறினர். புலிகள் முஸ்லிம்களைப் போல அபாயக் குரல் எழுப்பி, சிறிய காயங்களுடன் கிட ந்தவர்கள் மற்றும் உயிர் த ப்பிக் கிடந்தவர்களையும் எழுப்பி அவர்களையும் தந்திரமாகக் கொன்றதாகவும் சொன்னார்கள்.

ஒரு சிறுன்மைச் சமூகத்தின் உரிமைக்காகப் போராடுவதாகக் கூறிய இயக்கம், தமக்குப் பக்கத்திலேயே வாழும் இன்னுமொரு சிறுபான்மைச் சமூகத்தை மிக கீழ்த்தரமான முறையில், ஈவிரக்கமில்லாமல் கொன்று குவித்ததை போல ஒரு பேரவலம் உலகில் வேறெங்கும் நடந்திருக்காது.

குருக்கள்மடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்ட சூடு ஆறுவதற்கிடையில் ஒரு மாதத்திற்குள்ளேயே இந்த கைங்கரியத்தைப் புலிகள் மேற்கொண்டனர். முஸ்லிம்களை அழித்தொழிக்கும் திட்டத்தில் புலிகள் எந்தளவுக்கு ஈடுபாடாக இருந்தார்கள் என்பதற்கு இதுவொரு சான்றாகும்.

அத்தோடு நிற்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்தில் அதாவது ஆகஸ்ட் 11ஆம் திகதி ஏறாவூர் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம்கள் 121 பேர் இதே பாணியில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதே காலப் பகுதியில்தான், அக்கரைப்பற்று பள்ளிவாசலிலும் வேறு இடங்களிலும் புலிகள் தாக்குதல் நடத்தி பலரை கொன்றனர்.

ஆனாலும், அவர்களின் வெறி அடங்கியிருக்கவில்லை. 1990ஆம் ஆண்டு ஒக்டோபரில் வடக்கில் வாழையடி வாழையாக வாழ்ந்த முஸ்லிம்கள் ஒரு இலட்சம் பேர் உடுத்திருந்த ஆடையோடு மட்டும் சில மணிநேரங்களில் அங்கிருந்து இதே புலிகளால் வெளியேற்றப்பட்டனர்.

முஸ்லிம் சமூகம், தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கும் அரசியலுக்கும் செய்த பங்களிப்புக்களையும் வரலாற்று உண்மைகளையும் மறைத்து விட்டு, அற்ப காரணங்களுக்காகவும் முஸ்லிம்களை அடக்குவதற்காகவும் விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, இன்று ஜனநாயகம் பேசுகின்ற பல தமிழ் குழுக்கள் செய்த கடத்தல்கள், கப்பம்கோரல், அட்டூழியங்கள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த விவகாரங்களை முஸ்லிம்கள் இறைவனிடம் பாரம் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டனர் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு சில பாதிக்கப்பட்ட குடும்பங்களும் செயற்பாட்டாளர்களும் சில முயற்சிகளைச் செய்தாலும், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இதற்காக நீதி வேண்டிப் பேராராடவில்லை.

தமிழர்களுக்கு நடந்த அநியாயங்களுக்காகப் பேசிய, பேசும் தமிழ் அரசியல்வாதிகள் 'முஸ்லிம்களுக்கும் ஏன் அப்பாவிச் சிங்கள மக்களுக்கும் நடந்ததும் மீறல்தான். அதற்கும் விசாரணைகள் வேண்டும்' என்று கூறியதாக ஞாபகத்தில் இல்லை. இப்படியான ஒரு சூழலில்தான் நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றோம்.

எனவே, வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, கடத்தல், காணாமலாக்கபடுதல் சம்பங்கள் மற்றும் கிழக்கில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பள்ளிவாசல் படுகொலைகள் என, 30-35 வருடங்களாக நீதி நிலைநாட்டப்படாத விவகாரங்களுக்கும் நீதி விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

புலிகளில் தலைவர் பிரபாகரன், இவ்வாறான பெரிய அநியாயத்தை 'ஒரு துன்பியல் நிகழ்வு' என்று ஒரே வசனத்தில் சொல்லி முடித்துக் கொண்டார். அவ்வாறே, விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்று கூறி இந்த சம்பவங்களுக்கான நீதி விசாரணைகளை நடத்தாமல் விட முடியாது.

இந்தப் படுகொலைகளுக்கு யார் கட்டளையிட்டார்கள், யார் செய்தார்கள் என்ற உண்மை கண்டறியப்பட்டு அவர்கள் குற்றவாளிகள் என்பது உலகுக்கு அறிவிக்கப்பட வேண்டும். புலிகள் அமைப்பில் மீதமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருப்போர் பொருத்தமானவர்களாக இருப்பார்களாயின் இதற்கு பொறுப்புக்கூறச் செய்யப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### துர்நாற்றத்தால் அசௌகரியம்



ஹட்டன் - டிக்கோயா நகர சபையினால் ஹட்டன் நகரில் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுகள் ஹட்டன் கொழும்பு பிரதான வீதியின் ரொத்தஷ்ட் பகுதியில் குவிந்து துர்நாற்றம் வீசுவதால் குறித்த வீதியின் ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், அப்பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு உணவை உண்பதற்கோ, அல்லது நித்திரை கொள்ளவோ முடியாத நிலை காணப்படுவதாகவும் சமைத்த உணவுகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை, ஹட்டன் - கொழும்பு, மற்றும் ஹட்டன்- கண்டி, நாவலபிட்டி ஆகிய பிரதேசங்களுக்குப் பேருந்தின் ஊடாக செல்லும் பயணிகள் இந்த துர்நாற்றம் காரணமாகச் சுகாதார சீர்கேடுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வீதியோரமாகக் கொட்டப்படும் கழிவுகளுக்கு ஹட்டன் டிக்கோயா நகரசபை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

– எஸ்.சதீஷ்

# கோலியுடன் காதலா? உண்மையை உடைத்த தமன்னா



கிரிக்கெட் வீரர் விராட் கோலி, ஹிந்தி நடிகை அனுஷ்கா சர்மாவை திருமணம் செய்வதற்கு முன்னதாக, நடிகை தமன்னாவை காதலித்தார் எனவும், பிரேக்கப் ஆனதாகவும் கூறப்பட்டது.
அது குறித்து தற்போது விளக்கம் அளித்துள்ள தமன்னா கூறியதாவது, “நான் விராட் கோலியை ஒரேயொரு நாள் தான் சந்தித்தேன். அதுவும் ஷூட்டிங்கிற்காக. அதன் பிறகு நான் விராட்டை பார்க்கவில்லை. அவரிடம் பேசியது கூட இல்லை. அப்படி இருக்கும்போது நாங்கள் டேட் செய்ததாகப் பேசி விட்டார்கள்” என்றார்.
அத்துடன், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் அப்துல் ரசாக்குக்கும், தமன்னாவுக்கும் இரகசியமாகத் திருமணம் நடந்துவிட்டதாக 2020ம் ஆண்டு பேசப்பட்டது. அது பற்றி தற்போது தமன்னா கூறுகையில்,
எனக்கும், அப்துல் ரசாக்குக்கும் திருமணம் நடந்து சில காலம் சேர்ந்திருந்தோம். 3 பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று இணையத்தில் தவறான தகவல் பரப்பப்பட்டது. என்னுடம், எந்தவித தொடர்பும் இல்லாத ஆளுடன் என்னைச் சேர்த்து வைத்துப் பேசும்போது, அது நல்லது இல்லை.
ஆனால், இது போன்ற விஷயம் நம் கட்டுப்பாட்டில் இல்லை” என்றார்.
தமன்னாவை போய் கோலி ஏன் பிரிந்தார் என்றும், விராட் கோலியும், தமன்னாவும் திருமணம் செய்து கொண்டிருக்கலாம் என்று ரசிகர்கள் பேசி வந்த நிலையில், அவர்களின் கேள்விக்கு தற்போது பதில் கிடைத்து விட்டது.



# அனிருத்துக்கு உதவிய ஏஐ

தமிழ் திரையுலகில் பிரபல இசையமைப்பாளராக வலம் வரும் அனிருத், தெலுங்கில், தனக்கு தேவைப்படும்போது ‘சாட் ஜிபிடி’-ஐ பயன்படுத்தித் தான் இசையை உருவாக்குவதாகத் தெரிவித்துள்ளார்.
இது குறித்து கூறுகையில், ‘அண்மையில் ஒரு பாடலுக்கு என கம்போசிங்கில் நான் ஈடுபட்டிருந்தபோது, இரண்டு வரிகளில் சிக்கிக்கொண்டேன். அப்போது அதை சாட் ஜிபிடி-க்கு எடுத்துச் சென்று ஏஐ இடம் எனக்கு உதவுமாறு கேட்டேன். அப்போது சாட் ஜிபிடி எனக்கு சுமார் 10 ஆப்ஷன்களை வழங்கியது. அதில் ஒன்றை தேர்ந்தெடுத்து எனது இசைப் பணியைத் தொடர்ந்தேன்” என்று அனிருத் வெளிப்படையாகக் கூறியுள்ளார். அத்துடன், சில சமயங்களில் சரியான இசைத் தொகுப்புகள் கிடைக்காமல் தவிக்கும் போது இதுபோன்று ஏஐ-யின் உதவியை நாடுவதில் எந்த தயக்கமும் எனக்கு இல்லை என்கிறார் அனிருத்.

# ‘பறந்து போ’



இயக்குநர் ராம் இயக்கத்தில் மிர்ச்சி சிவா நடிப்பில் கடந்த மாதம் 4ஆம் திகதி வெளியான ‘பறந்து போ’ படத்தில் கிரேஸ் ஆண்டனி, அஞ்சலி மற்றும் மாஸ்டர் மிதுல் ரியான் ஆகியோர் முன்னணி பாத்திரங்களில் நடித்துள்ளனர். மியூசிக்கல் நகைச்சுவை படமாக உருவாகியுள்ளது.
இப்படம் கடந்த பெப்ரவரியில் நடந்து முடிந்த 54வது ரோட்டர்டாம் சர்வதேச திரைப்பட விழாவில் ப்ரீமியர் செய்யப்பட்டது. அங்கு நல்ல வரவேற்பைப் பெற்றது. இதையடுத்து, வெளியான திரையரங்க வெளியீட்டிலும் நல்ல வரவேற்பைப் பெற்றது.
இந்த நிலையில், இப்படத்தின் ஓடிடி அப்டேட் தற்போது வெளியாகியுள்ளது. அதன்படி ஜியோ ஹாட்ஸ்டாரில் ஆகஸ்ட் 5ஆம் திகதி இப்படம் வெளியாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழைத் தாண்டி மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மராத்தி மற்றும் பெங்காலி மொழியில் பார்க்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# நடிகர்களால் திடீர் பரபரப்பு

‘கூலி’ படத்தின் இசை வெளியீடு விழா ஆகஸ்ட் 2ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் ரஜினிகாந்த், சத்யராஜ், நாகார்ஜுனா, உபேந்திரா, சவுபின் ஷாகிர், ஸ்ருதிஹாசன் ஆகியோருடன் ஹிந்தி நடிகர் அமீர்கான் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வழக்கம் போல ரஜினிகாந்தின் மேடைப் பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியது.
அதற்கடுத்து ஞாயிற்றுக்கிழமை, நடிகர் அஜித் திரையுலகில் நுழைந்து 33 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு ஒரு பரபரப்பான அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் இடம் பெற்ற சில வரிகள் சிலரை மறைமுகமாகக் குறிப்பிட்டதாகப் பேசப்பட்டு வருகின்றது.
இந்த நிலையில், நடிகர் சூர்யா குடும்பத்தினர் கடந்த 20 வருடங்களாக அகரம் அறக்கட்டளை மூலம் கல்வி உதவி செய்ததை விழாவாகக் கொண்டாடினார்கள். அதில் நடிகரும், எம்.பியுமான கமல்ஹாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.
இதனால், கடந்த மூன்று நாட்களாக சமூக வலைத்தளங்கள் பக்கம் போனாலும், யுடியூப் தளங்கள் பக்கம் போனாலும் ரஜினி, கமல், அஜித், சூர்யா தொடர்பான செய்திகள் நிறைந்து காணப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

# கூலியில் ட்விஸ்ட்



ரஜினி நடித்த கூலி திரைப்படத்தின் ட்ரைலரை பார்த்த பிறகு பலர் கூலி திரைப்படம் ஒரு சைன்ஸ் பிக்ஷன் படமாக இருக்க வாய்ப்புகள் உள்ளது என கூறி வருகின்றனர்.
ரஜினிகாந்த் நடிப்பில் உருவான கூலி திரைப்படம் இன்னும் பத்து நாளில் திரையில் வெளியாக இருக்கின்றது. அதற்காக ப்ரோமோஷன் வேலைகளைப் படக்குழு தீவிரமாக செய்து வருகின்றனர்.
அண்மையில் இப்படத்தின் இசை வெளியீட்டு விழா மிகப்பிரம்மாண்டமான முறையில் நடந்தது. தொடர்ந்து படத்தின் ட்ரைலரும் வெளியிடப்பட்டு அதற்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பும் கிடைத்திருக்கின்றது.
இந்நிலையில், ட்ரைலரில் வரும் சில காட்சிகளைப் பார்க்கும்போது இது சைன்ஸ் பிக்ஷன் படமாக இருக்க வாய்ப்புகள் இருப்பதாக ரசிகர்கள் கூறுகின்றனர். ட்ரைலரில் ஸ்ருதிஹாசன் ஒரு இயந்திரத்தின் அருகில் இருப்பார். அதுபோல சத்யராஜ் எதோ ஒரு இயந்திரத்தை இயக்கிக்கொண்டு இருப்பார், அதைத்தொடர்ந்து ஒரு ஷாட்டில் நாகர்ஜுனா பல திரைகளில் தெரிவார்.
சத்யராஜ் பேசும் வசனத்தில் கூட 30 வருஷமா ஒப்லைனில் இருந்த ஒருத்தனை ஒன்லைனிற்கு கொண்டு வந்திருக்கிறேன் என்றும் ஒரு வசனம் இடம்பெற்றிருக்கும். இதையெல்லாம் வைத்து பார்க்கையில் தான் கூலி சைன்ஸ் பிக்ஷன் படமாக இருக்குமோ என்ற சந்தேகம் சிலருக்கு தோன்றியுள்ளது. ஆனால், இது எந்தளவிற்கு உண்மையாக இருக்கும் என தெரியவில்லை. இதெல்லாம் வெறும் ரசிகர்களின் கணிப்பாகத் தான் தற்போது வரை இருக்கின்றது.
இப்படத்தின் மீது ஒட்டுமொத்த தமிழ் திரையுலகமே மிகப்பெரிய நம்பிக்கை வைத்திருக்கின்றது. மற்ற மொழி படங்கள் செய்யும் சாதனைகளைக் கூலி திரைப்படம் முறியடிக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் உள்ளது.




## ரயில் பாதைக்குரிய சமிக்ஞைக்கு

# முதல் கொடுப்பனவு வழங்கல்

மாஹோ முதல் அனுராதபுரம் வரையிலான ரயில் பாதைக்குரிய நவீன சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு முறைமையை பொருத்துவதற்கான முதலாவது கொடுப்பனவான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை (770 மில்லியன் இலங்கை ரூபா) இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்த நிதி வழங்கப்பட்டமையானது இந்தியா இலங்கை இடையிலான ரயில்வே துறை சார்ந்த ஒத்துழைப்பில் மற்றொரு மைல்கல்லாக கருதப்படுகிறது என இலங்கைகான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டமானது 2025 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த உயர் மட்ட விஜயத்தின்போது, இந்திய பிரதமர் மற்றும் இலங்கை ஜனாதிபதி ஆகியோரால் கூட்டாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் 14.89 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனுதவி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவிருந்த இந்தத் திட்டமானது, 2024 டிசெம்பர் மாதம் இலங்கை ஜனாதிபதி அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, இந்திய அரசாங்கத்தினால் நன்கொடை உதவி திட்டமாக மாற்றப்பட்டது. தற்போது இந்தத் திட்டம் இந்திய பொதுத்துறை நிறுவனமான இர்கோன் சர்வதேச வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் ஊடாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்திய உதவியின் கீழ்வடக்கு ரயில் பாதையானது மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீட்டர் வேகம் வரை செல்லக்கூடிய வகையில் தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் நவீன சமிக்ஞை தொகுதி பொருத்தப்படவுள்ளதுடன், இதன் மூலமாக பயணிகளின் பாதுகாப்பு மேம்படுத்தப்படும் அதேசமயம் ரயில் சேவைகள் அதிகரிக்கப்பட்டு வினைத்திறனுடனான சேவைகள் மேம்படுத்தப்படும். ஒவ்வொரு ரயில் நிலைய பிரிவுகளுக்குள்ளும் நிகழ் நேரத்தில் ரயில்களின் நிலையினை கண்டறிதல், நவீன மயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து ஒட்டுமொத்த வலையமைப்பினையும் கண்காணிக்கப்படுவதை உறுதி செய்தல், ஒவ்வொரு ரயில் நிலையங்களிலும் சமநேர வருகை மற்றும் புறப்பாடுகளை ஒழுங்கமைத்தல், நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க வகையில் செயல்படுத்துதல் மற்றும் தாமதங்களை குறைத்தல் போன்ற வசதிகளை இந்த முறைமை வழங்குகின்றது. இந்த திட்டத்தின் முதற்கட்ட செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தொடரும் நிலையில் 2026 ஆகஸ்ட் மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா இலங்கை இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்பாடுகளில் ரயில்வேக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் குறிப்பாக ரயில் பாதை புனரமைப்பு, ரயில் பெட்டிகள் விநியோகம் மற்றும் சமிக்ஞை முறைமைகள் பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு இந்தியா ஆதரவு வழங்கியுள்ளது. இதுவரை இந்தியா அண்ணளவாக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் வரையில் இலங்கை ரயில்வே துறைக்காக நிதி உதவியினை வழங்கியுள்ளது. இதுவரையில் இந்தியாவால் 500 கிலோமீட்டர் ரயில்வே பாதை புனரமைக்கப்பட்டும் நிர்மாணிக்கப்பட்டும் உள்ளன. அதேநேரம், வடக்கு முதல் தெற்குவரையிலான சீரான தொடர்புகளை மேம்படுத்தும் நோக்குடன் 400 கிலோமீட்டர் வரையில் சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு பொறிமுறை கட்டமைப்புகள் இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக ரயில் இயந்திரங்கள், டீசலில் இயங்கும் ரயில்கள் மற்றும் பிரதான இயந்திரங்கள் போன்றவை இலங்கை ரயில்வே கட்டமைப்பின் திறனை விருத்தி செய்யும் வகையில் இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தொடர்புகளையும் உட்கட்டமைப்பையும் மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் கொண்டிருக்கும் வலுவான உறுதிப்பாட்டினை மீள வலியுறுத்தும் இத்திட்டங்கள் மக்களை இலக்காகக் கொண்ட இந்திய அபிவிருத்தி பங்குடைமையின் அணுகுமுறையினை பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# அன்னதான மண்டபம் திறந்து வைப்பு

நுவரெலியாவில் உள்ள சீதா எலிய அம்மன் கோவிலில் புதிதாக கட்டப்பட்ட அன்னதான மண்டபம் ஞாயிற்றுக்கிழமை (03) அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட அம்மன் கோவில் அன்னதான மண்டபத்தை வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் திறந்து வைத்தனர்.

சீதா எலிய அம்மன் கோவிலின் அறங்காவலர் குழுவின் தலைவர் வி. ராதா கிருஷ்ணன், திறப்பு விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் ஆகியோரை வரவேற்றார்.

இந்த திறப்பு விழாவில் பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விருந்தினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

– ரஞ்சித் ராஜபக்ஷ



















# கொழும்பில் மலர்ந்த சர்வதேச சகோதரிகள் தினம்

புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணி நடத்திய சர்வதேச சகோதரிகள் தினம் கொழும்பு-13, புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள 'எக்ஸலன்ஸ்' சர்வதேச பாடசாலையில் வளாகத்தில் ஞாயிறன்று (03) அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது .

இதன்போது, அமைப்பின் தலைவி ரஞ்சனி சுரேஷ், மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அமைப்பின் ஸ்தாபகர் ராதா மேத்தா சிறார் காப்பகங்களுக்கான உடை மற்றும் அத்தியாவசிய அவசிய பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்தார்.

இவை மட்டக்குளியில் உள்ள மௌசெவன சிறுவர் இல்லம் மற்றும் வத்தளை கோகுலம் சிறுவர் நிலையம் என்பனவற்றிற்கு வழங்கப்பட்டன.

பிரதம நிர்வாகத்தின் தலைவர் ஷண்மு மற்றும் மகளிர் அணி செயலாளர் பிரியதர்ஷினி பாடசாலைகளுக்கான நூல்கள் வழங்கினர். இவை இரத்தினபுரி நிரியெல்லை தமிழ் வித்தியாலயம் மற்றும் பசறை சைவ பிரகாசம் தமிழ் வித்தியாலயம் என்பனவற்றிற்கு வழங்கப்பட்டன. ஆனந்தி குறும்படக் கதை சொல்லும் நிகழ்வில் பங்கேற்றுக் கதை சொன்னார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நிகழ்ச்சியை மகளிர் அணியின் பொருளாளர் உஷா கெனடி தொகுத்து வழங்கினார்.

# 'வாழும் வசந்தன்'

மட்டக்களப்பு-மகிழடித்தீவில் வசந்தன் பாடல்களுடன் 'வாழும் வசந்தன்' நூல் வெளியீட்டு விழா சிறப்பாக ஞாயிற்றுக்கிழமை (3) அன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு-முனைக்காட்டைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் வாழும் தாந்தியான் சிதம்பரப்பிள்ளை தொகுத்து வழங்கிய 'வாழும் வசந்தன்' நூல்வெளியீட்டு விழா மகிழடித்தீவு பிரதேச கலாசார மண்டபத்தில் நூலாசிரியர் தலைமையில் நடைபெற்றது.

அதிபர் வ.துசாந்தனின் வரவேற்பு உரையுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் முதன்மை அதிதிகளாகக் கிழிக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் சு.சிவரெத்தினம், தேசிய கல்வி நிறுவன தமிழ்பிரிவுப்பணிப்பாளர் கலாநிதி முருகு தயாநிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

சிறப்பு அதிதிகளாகக் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள். மோகனதாசன், செங்கதிரோன் த.கோபாலகிருஷணன் கலந்துகொண்டனர்.

நூல் அறிமுகவுரையினை சின்னத்தம்பி குருபரன் நிகழ்த்தினார்.

மேலும் பிள்ளையார் வசந்தன், முசுற்றுவசந்தன், கூவாய் குயில் வசந்தன், அனுமார் வசந்தன் போன்ற வசந்தன்களும் ஆடல் நிகழ்வாக இடம்பெற்றது.

முதற்பிரதியினை முன்னாள் கொத்தணி அதிபர் ச.சந்திரசேகரம் பெற்றார்.

இந்நிகழ்வில், வசந்தன் கலைச்செம்மல் பாலிப்போடி நல்லதம்பி விசேட கௌரவத்தினை பெற்றுக்கொண்டார்.

சுபீட்சம் பிரதம ஆசிரியர் சுவிட்சர்லாந்தில் வாழும் வேதா என அழைக்கப்படும் தா.வேதநாயகத்தின் சகோதரரான ஓய்வு நிலை கூட்டுறவுச்சங்க பரிசோதகர் தா.சிதம்பரப்பிள்ளை ஏற்புரை வழங்கினார்.

– வி.ரி.சகாதேவராஜா





# METROPOLITAN கல்லூரியின் பட்டமளிப்பு விழா

இலங்கையின் முதன்மையான தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் ஒன்றான மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் 2025ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) ஞாயிற்றுக்கிழமை (03) அன்று நடைபெற்றது.

இதன்போது, பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த 555 பேர் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். பட்டதாரிகளின் கல்வி சாதனைகள் கொண்டாடப்பட்டதுடன், இதில் தேசிய மற்றும் சர்வதேச பிரமுகர்கள், இராஜதந்திரிகள், கல்வியாளர்கள் என முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் நீதி மற்றும் உயர்கல்வி அமைச்சரும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் பொது விநியோக அமைச்சருமான டாக்டர் ஹர்ஷ டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் முன்னாள் கல்வி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் நீதி அமைச்சருமான விஜயதாச ராஜபக்ஷ மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் (COPE) முன்னாள் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிர்னே அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் நிறுவன வேந்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான (*TRNC*) டாக்டர் *SerhatAkpinar,* நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் H.E. David Pine, மலேசியாவின் உயர்ஸ்தானிகர் H.E. BadliHisham, இத்தாலியின் தூதர் H.E. DamianoFrancovigh, துருக்கியின் தூதர் H.E. SemihL-tf-Turgut, இந்தோனேசியாவின் தூதர் *H.E. DewiGustinaTobing,* சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் துணைத் தலைவர் H.E. Olivier Praz, வியட்நாம் தூதரகத்தின் துணைத் தலைவர் *Le Van Huong,* சீன தூதரகத்தின் ஆலோசகர் Mei Jing, இந்திய உயர்ஸ்தானிகர் முதல் செயலாளர் (கல்வி) *Sandeep Chaudhary*, பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் கல்வித் தலைவர் AdeelSattar, மற்றும் இந்தியாவின் ARNI பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் *Vivek Singh,* உள்ளிட்ட பல சர்வதேச பிரமுகர்கள் மற்றும் இராஜதந்திரிகளும் கலந்து கொண்டனர்.

மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் தலைவரும், கல்முனையின் முன்னாள் மேயரும், லங்கா அசோக் லேலண்டின் முன்னாள் தலைவருமான டாக்டர் சிராஸ் மீராசாஹிப் மற்றும் தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையத்தின் (NEDA) ஆதரவின் கீழ் இந்த விழா நடைபெற்றது. மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி அ.ஃப்ரா சிராஸ் அவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

2025 பட்டமளிப்பு விழா, மெட்ரோபாலிட்டன் கல்லூரிக்கும் ஐரோப்பாவின் மிகப்பெரிய அமெரிக்க பாணி பல்கலைக்கழகமான கிர்னே அமெரிக்கன் பல்கலைக்கழகத்திற்கும் (GAU) இடையிலான கல்வி கூட்டாண்மையின் 20 ஆண்டுகால இணைப்பின் கொண்டாட்டத்தையும் குறித்தது. கூடுதலாக, கல்லூரி UK-ஐ தளமாகக் கொண்ட, OFQUAL-அங்கீகாரம் பெற்ற விருது வழங்கும் அமைப்பான OTHM உடன் பெருமைக்குறிய இணைப்புகளைப் பேணுகிறது. சர்வதேச கல்வித் தரங்களைப் பராமரிப்பதற்கும் உலகளாவிய ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் மெட்ரோபாலிட்டன் கல்லூரியின் உறுதிப்பாட்டை இந்தக் கூட்டாண்மைகள் பிரதிபலிக்கின்றன.

தற்போது, கல்லூரியில் 100க்கும் மேற்பட்ட ஆசிரிய உறுப்பினர்களும், 1,500க்கும் மேற்பட்ட மாணவர்களும் டிப்ளமோ முதல் முனைவர் பட்டம் வரையிலான படிப்புகளில் சேர்ந்துள்ளனர். முகாமைத்துவம், கல்வி, உளவியல், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் சமூக அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கியது. வாழ்நாள் முழுவதும் கற்றல், தொழில் சார்ந்த பயிற்சி மற்றும் உலகளாவிய வெளிப்பாடு ஆகியவற்றில் வலுவான முக்கியத்துவம் இந்த திட்டங்களுக்கு வழங்கப்படுகிறது.

மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் முழுமையான அணுகுமுறை, மாணவர்கள் உலகளாவிய இயக்கத் திட்டங்கள், மென் திறன் மேம்பாடு மற்றும் விரிவான தொழில்துறை பயிற்சி உள்ளிட்ட வகுப்பறைக்கு அப்பால் மதிப்புமிக்க கற்றல் அனுபவங்களை பெறுவதை உறுதிசெய்கிறது, இது அதிகரித்து வரும் போட்டி நிறைந்த உலகளாவிய பணியாளர்களில் சிறந்து விளங்க அவர்களைத் தயார்ப்படுத்துகிறது.

2025 பட்டமளிப்பு விழா மாணவர் சாதனைகளில் ஒரு மைல்கல்லைக் குறிப்பது மட்டுமல்லாமல், உயர்தர கல்வியை வழங்குவதற்கான மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் அசைக்க முடியாத நோக்கத்தையும், மாற்றத்தக்க கற்றல் அனுபவங்கள் மூலம் உலகளாவிய, சமூக மற்றும் மேம்பாட்டு முன்னுரிமைகளுக்குப் பங்களிக்கும் அதன் தொலைநோக்குப் பார்வையையும் பிரதிபலிக்கிறது. 26 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு பாரம்பரியத்துடன், மெட்ரோபொலிட்டன் கல்லூரி, கல்விச் சிறப்பு, உலகளாவிய பொருத்தம் மற்றும் சமூக தாக்கத்திற்கான அதன் உறுதிப்பாட்டைத் தொடர்ந்து நிலைநிறுத்தி, வேகமாக வளர்ந்து வரும் உலகில் செழிக்கத் தயாராக இருக்கும் பட்டதாரிகளின் தலைமுறைகளை உருவாக்குகிறது.








### அகதிகள் சென்ற படகு மூழ்கியதில்

# 68 அகதிகள் பலி; 74 பேர் மாயம்

சனா

ஏமன் அருகே படகு மூழ்கியதில் அகதிகள் 68 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 74 பேர் காணாமல் போயுள்ளனர், அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏமனில் உள்ள அப்யான் மாகாணத்திற்கு அருகில் உள்ள கடற்கரையில் புலம் பெயர்ந்தோர் 154 பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர், பாதிக்கப்பட்டவர்களை மீட்பு பணியில், தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தில், தண்ணீரில் மூழ்கி அகதிகள் 68 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 74 பேர் மாயமாகியுள்ளனர்.

இது குறித்து, மாகாணத்தின் மூத்த சுகாதார அதிகாரி அப்துல் காதிர் பஜமீல் கூறியதாவது,

இதுவரை 10 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒன்பது பேர் எத்தியோப்பிய நாட்டினர். ஒருவர் ஏமன் நாட்டவர் ஆவர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது என்றார்.

ஆபிரிக்காவின் கொம்புக்கும் ஏமனுக்கும் இடையிலான கடல் பாதையின் ஆபத்துகள் குறித்து சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு பலமுறை எச்சரித்துள்ளது. பெரும்பாலும் எத்தியோப்பியா மற்றும் சோமாலியாவிலிருந்து வரும் புலம்பெயர்ந்தோர், வேலை தேடி சவூதி அரேபியா அல்லது பிற வளைகுடா நாடுகளுக்கு செல்ல முயன்று கடலை கடக்க முயற்சி செய்யும் போது விபத்து நிகழ்கிறது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### இந்தியாவுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா சமப்படுத்தியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில் 1-2 என இந்தியா பின்தங்கியிருந்த நிலையில், ஓவலில் வியாழக்கிழமை (31) அன்று ஆரம்பித்து திங்கட்கிழமை(04) அன்று முடிவுக்கு வந்த ஐந்தாவது போட்டியை இந்தியா வென்றமையைத் தொடர்ந்தே 2-2 என்ற ரீதியில் தொடர் சமநிலையானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 224/10 (துடுப்பாட்டம்: கருண் நாயர் 57, சாய் சுதர்ஷன் 38, வொஷிங்டன் சுந்தர் 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: குஸ் அட்கின்ஸன் 5/33, ஜொஷ் டொங்க் 3/57, கிறிஸ் வோக்ஸ் 1/46)

இங்கிலாந்து: 247/10 (துடுப்பாட்டம்: ஸக் குறோலி 64, ஹரி ப்றூக் 53, பென் டக்கெட் 43, ஜோ றூட் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரசீத் கிருஷ்ணா 4/62, மொஹமட் சிராஜ் 4/86, ஆகாஷ் டீப் 1/80)

இந்தியா: 396/10 (துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வால் 118, ஆகாஷ் டீப் 66, வொஷிங்டன் சுந்தர் 53, இரவீந்திர ஜடேஜா 53, துருவ் ஜுரேல் 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் டொங்க் 5/125, குஸ் அட்கின்ஸன் 3/127, ஜேமி ஓவெர்ட்டன் 2/98)

இங்கிலாந்து: 367/10 (துடுப்பாட்டம்: ஹரி ப்றூக் 111, ஜோ றூட் 105, பென் டக்கெட் 54, ஒலி போப் 27 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 5/104, பிரசீத் கிருஷ்ணா 4/126, ஆகாஷ் டீப் 1/85).

# ரஷ்யாவுக்கு இந்தியா மறைமுக நிதியுதவி

### அமெரிக்கா குற்றச்சாட்டு

வொஷிங்டன்

உக்ரைனில் ரஷ்யா நடத்தும் போருக்கு இந்தியா மறைமுகமாக நிதியுதவி செய்வதாக ரஷ்யாவிடம் இந்தியா எண்ணெய் வாங்குவதை விமர்சித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உயர்மட்ட ஆலோசகர்களில் ஒருவரான ஸ்டீபன் மில்லர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் ஸ்டீபன் மில்லர் கூறியுள்ளதாவது, “இந்தியா, ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று ட்ரம்ப் விரும்புகிறார். ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதன் மூலம் உக்ரைன் உடனான போருக்கு இந்தியா தொடர்ந்து நிதியுதவி செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று ட்ரம்ப் மிகத் தெளிவாகக் கூறுகிறார். ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதில் இந்தியா அடிப்படையில் சீனாவுடன் நெருக்கம் காட்டுகிறது என்பதை அறிந்து மக்கள் அதிர்ச்சியடைவார்கள்” என்றார்.

முன்னதாக ரஷ்யாவிடம் இருந்து இராணுவ உபகரணங்கள் மற்றும் அதிக எண்ணெய் பொருட்களை வாங்குவதால், இந்தியாவுக்கு 25 சதவீத வரியை ஆகஸ்ட் 7ஆம் திகதி முதல் அமுலுக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை தொடர்ந்து, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் பொருட்கள் கொள்முதலை இந்தியா குறைந்து விட்டதாக கூறப்பட்டது. ஆனால், அப்படி ஏதுமில்லை, ரஷ்யாவிடம் இருந்து வழக்கம் போல எண்ணெய் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு இந்தியா மறைமுகமாக நிதியுதவி செய்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஆலோசகர் ஸ்டீபன் மில்லர் குற்றம்சாட்டியுள்ளார்.

### பிணைக்கைதிகளை சித்திரவதைக்கும் ஹமாஸ்

# ICRC இன் உதவியை நாடும் இஸ்ரேல்

ஜெருசலம்



காசாவில் சிறைபிடிக்கப்பட்ட தங்கள் நாட்டு பிணைக்கைதிகளுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்க, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வர வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

கடந்த இரண்டரைக்கு ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நீடித்து வருகிறது. கடந்த 2023ஆம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் அமைப்பினர், 1,200 பேரை சுட்டுக் கொன்றதுடன், 250 பேரை பிணைக்கைதிகளாக பிடித்து சென்றுள்ளனர்.

பிணைக்கைதிகளில் பலர் இறந்து விட்ட நிலையில், சிலர் மீட்கப்பட்டுள்ளனர். இன்னும் 49 பேர் ஹமாஸ் பிடியில் சிக்கியுள்ளனர். பிணைக்கைதிகளை விடுவிக்கக் கோரி ஹமாஸ் அமைப்பின் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனிடையே, இஸ்ரேலை அடிபணிய வைக்கும் விதமாக, தங்களது பிடியில் உள்ள இஸ்ரேல் பிணைக்கைதி ஒருவரின் வீடியோவை ஹமாஸ் வெளியிட்டுள்ளது. எலும்பும் தோலுமாக காட்சியளிக்கும் அந்த நபர், மண்வெட்டியுடன் தனக்கு தானே புதைக்குழியை வெட்டிக் கொள்ளும் காட்சி இடம்பெற்றுள்ளது. இந்த வீடியோ வெளியாகி உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

### வீட்டுக்குள் புகுந்த கங்கை நீரில்

# புனித நீராடிய பொலிஸ் அதிகாரி

பிரயாக்ராஜ்



உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் பெய்து வரும் கடும்மழை காரணமாக கங்கை, யமுனை நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பிரயாக்ராஜ் நகரின் தாராகஞ்ச், ராஜாபூர், சலோரி உள்ளிட்ட தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. 1,400 பேர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, மாநில பொலிஸ் உதவி ஆய்வாளராக பணியாற்றும் சந்திரதீப் நிஷாத் சமூக வலைத்தளத்தில் சில வீடியோக்களை பகிர்ந்துள்ளார்.

அத்துடன், “திங்கட்கிழமை(04) காலை பணிக்கு புறப்பட்டபோது, தாய் கங்கா என் வீட்டுக்கு வந்திருந்தார். என் வீட்டு வாசலிலேயே அவரை வணங்கி ஆசி பெற்றேன்” என பதிவிட்டுள்ளார்.

ஒரு வீடியோவில் சீருடையில் இருக்கும் நிஷாத், தன் வீட்டு வாசலில் சூழ்ந்துள்ள கங்கை வெள்ளத்தில் ரோஜா இதழ்களை தூவுகிறார். பின்னர் பால் ஊற்றுகிறார். மற்றொரு வீடியோவில், நிஷாத் மேலாடை இல்லாமல் இடுப்பளவு தண்ணீர் இறங்கி கங்கை தாயை வணங்கியபடி புனித நீராடுகிறார். இந்த வீடியோக்கள் வைரலாக பகிரப்பட்டு வருகின்றன.

# ராகுலை வெளுத்து வாங்கிய நீதிமன்றம்

புதுடெல்லி

சீனா விவகாரம் தொடர்பாக காங்கிரஸ், எம்பி ராகுல் காந்தி எழுப்பிய சந்தேகங்களுக்கு இந்திய உயர் நீதிமன்றம் கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளது.

சீனா, இந்தியா இடையிலான மோதல் மற்றும் சீனாவால் இந்திய எல்லை பகுதி ஆக்கிரமிக்கப்பட்ட பிரச்சினை குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கடும் கேள்விகளை எழுப்பினார்.

சீன வீரர்கள் இந்திய வீரர்களை அடித்து கொண்டிருந்தபோது, எல்லையில் இந்தியா மீதான சீனாவின் தாக்குதல் குறித்து யாரும் பேசாமல் எனது பாரத் யாத்திரை குறித்து கேள்வி எழுப்புகின்றனர் என்றார்.

இந்திய இராணுவத்தை அவதூறாக பேசியதாக லக்னோ நீதிமன்றத்தில் ராகுல் காந்திக்கு எதிரான வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இந்த வழக்கு விசாரணைக்கு தடை கோரிய மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை(04) அன்று நடந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள் தீபன்கர்தத்தா, ஏஜி மாய்ஸ், ராகுல் குறித்து கடுமையாக கேள்விகள் எழுப்பியுள்ளனர்.

ஒரு எதிர்கட்சி தலைவராக இருக்கும் நீங்கள் ஏன்? இது போன்ற விடயங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிடுகிறீர்கள், இப்படி செய்யலாமா? இதனை பாராளுமன்றத்தில் எழுப்ப வேண்டியது தானே?

* நாட்டின் மீது உண்மையான பற்று இருந்தால் இப்படி கேள்வி எழுப்ப மாட்டீர்களே?
* நீங்கள் உண்மையான இந்தியராக இருந்தால் இப்படி பேச மாட்டீர்கள்.
* ஆதாரம் இல்லாமல் எதுவும் பேசாதீர்கள்.
* சீனாவில் 2 ஆயிரம் கிலோ மீட்டர் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாக எந்த ஆதாரத்தில் சொல்கிறீர்கள்?
* நீங்கள் அப்போது அங்கு (சீனாவில்) இருந்தீர்களா?
* உங்களிடம் ஏதும் நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளனவா?, கருத்து சுதந்திரம் என்ற பெயரில் எதையும் பேசக்கூடாது என்றனர்.

# புத்தளம் மாநகர சபை மேயர் கால்பந்தாட்ட லீக் நிர்வாகிகள் சந்திப்பு



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட லீக் நிர்வாக குழு உறுப்பினர்கள், புத்தளம் மாநகர சபை மேயர் எம்.எப்.எம். ரின்ஷாத் அஹ்மத்தை மாநகர சபை காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(03) அன்று சந்தித்து எதிர்கால கால்பந்தாட்ட அபிவிருத்திகள் தொடர்பாக கலந்துரையாடினர்.


மாநகர சபையின் பொறுப்பில் இருக்கின்ற புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் கால்பந்து போட்டிகளை நடத்தும்போது, எதிர்கொள்ளும் பல்வேறு விதமான சிக்கல்கள் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக நுழைவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதில் ஏற்படுகின்ற இழுபறிகள், விளையாட்டு வீரர்கள் இடைவேளையில் அமைதியாக இருந்து ஓய்வு எடுக்கின்ற இட அமைப்புகள் தொடர்பாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

மாநகர சபை மைதானம் மற்றும் இதர தேவைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை கூடிய விரைவில் எடுப்பதாக அஹ்மத் இதன்போது உறுதியளித்தார்.

இதன்போது, லீக்கின் தலைவர் முஹம்மது யமீனால் லீக் சார்பாக அஹ்மத்துக்கு நினைவுச்சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

# ஹங்கேரி குரான் பிறீ: வென்ற நொரிஸ்



ஹங்கேரி குரான் பிறீயில் மக்லரன் அணியின் லான்டோ நொரிஸ் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை (03) அன்று நடைபெற்ற பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த பிரித்தானியாவின் நொரிஸ் முதலிடம் பெற்ற நிலையில், பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த அவரின் சக மக்லரன் அணி ஓட்டுநரான ஒஸ்கார் பியாஸ்திரி இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடீஸ் அணியின் ஜோர்ஜ் ரஸல் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

அந்தவகையில், இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் பியாஸ்திரி 284 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ளார். 275 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நொரிஸும், 187 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நடப்புச் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பனும் காணப்படுகின்றனர்.

# சமநிலையில் டொட்டென்ஹாம் நியூகாசில்



தென்கொரியாவில் ஞாயிற்றுக்கிழமை(03) அன்று நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகங்களான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், நியூகாசில் யுனைட்டெட்டுக்கிடையிலான சிநேகபூர்வ போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை பிரென்னன் ஜோன்சன் பெற்றதுடன், நியூகாசில் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹார்வி பார்ன்ஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை, போர்த்துக்கல் கழகமான போர்ட்டோவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் தோல்வியடைந்திருந்தது.

இந்நிலையில், ஐக்கிய அமெரிக்காவில் திங்கட்கிழமை(04) அன்று நடைபெற்ற பிறீமியர் லீக் கழகங்களான மன்செஸ்டர் யுனைட்டெட், எவெர்ற்றனுக்கிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

### மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டித் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை பாகிஸ்தானும், இரண்டாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகளும் வென்றிருந்த நிலையில், ஐக்கிய அமெரிக்காவில் திங்கட்கிழமை (04) அன்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றதன் மூலமே 2-1 என்ற ரீதியில் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் சல்மான் அக்ஹா, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், சஹிப்ஸடா பர்ஹானின் 74 (53), சைம் அயூப்பின் 66 (49), ஹஸன் நவாஸின் 15 (07), குஷ்டில் ஷாவின் ஆட்டமிழக்காத 11 (06), பஹீம் அஷ்ரப்பின் ஆட்டமிழக்காத 10 (03) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் றொஸ்டன் சேஸ் 4-0-31-1, ஜேஸன் ஹோல்டர் 4-0-34-1, அகீல் ஹொஸைன் 4-0-32-0, குடகேஷ் மோட்டி 2-0-14-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 190 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், அலிக் அதனஸேயின் 60 (40), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்டின் 51 (35), ஜுவெல் அன்ட்றூவின் 24 (15), சேஸின் 15 (10), மோட்டியின் ஆட்டமிழக்காத 10 (04) ஓட்டங்களுடன் போராடியபோதும் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களையே பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் சுஃபியான் முக்கீம் 4-0-20-1, ஹரிஸ் றாஃப் 4-0-24-1, சைம் அயூப் 4-0-38-1, பஹீம் அஷ்ரப் 2-0-13-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர். இப்போட்டியின் நாயகனாக பர்ஹானும், தொடரின் நாயகனாக மொஹமட் நவாஸும் தெரிவாகினர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 05, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.